| நாள் | நேரம் | தலைப்பு | வேத பாடங்கள் | நடத்துபவர் | செய்தியளிப்பவர் |
|---|---|---|---|---|---|
| 01-02-2016 திங்கள் | காலை 5.30 | வாக்குதத்த ஆராதனை திருவிருந்து ஆராதனை | II தீமேத் 4:1 - 17 | ஆயர் / லேவீடர் | அருள்திரு டேனியேல் செல்லதுரை ஆயர் |
| 07-02-2016 ஞாயிறு | காலை 8.30 | திருவிருந்து ஆராதனை மீட்பின் காலம் | ஏசாயா 58 : 1 - 14 யோவான் 2 : 1 - 10 | ஆயர் / லேவீடர் | அருள்திரு டேனியேல் செல்லதுரை ஆயர் |
| 10-02-2016 புதன் | மாலை 7.00 | சாம்பல் புதன் - லெந்து காலம் திருவிருந்து சிலுவை மற்றவருக்காக பாடுபட அழைப்பு | I அரசர் 17: 12 - 24 மாற்கு 8:31-38 | ஆயர் / லேவீடர் | அருள்திரு டேனியேல் செல்லதுரை ஆயர் |
| 12-02-2016 வெள்ளி | மாலை 7.00 | லெந்து வெள்ளி - 1 தூய மரியா - இயேசுவின் தாய் | மத்தேயு 182 : 12 - 46 யோவான் 2 : 1 - 11, 19:25 | ஆயர் / லேவீடர் | திரு.கிளாட்வின் பிரபாகரன் செயலர் |
| 14-02-2016 ஞாயிறு | மாலை 8.30 | புறந்தள்ளப்பட்டோரோடும் விளிம்பு நிலையில் உள்ளவர்களோடும் இருத்தல் | எஸ்தர் 4:1 - 17 மாற்கு 1:40 - 45 | ஆயர் / லேவீடர் | கண்ணொளி அற்றோருக்கான நற்செய்தி |
| 19-02-2016 வெள்ளி | மாலை 7.00 | லெந்து வெள்ளி II தூயயோசேப்பு | மத்தேயு 1:19 - 25 லூக்கா 2:20-41 | ஆயர் / லேவீடர் | திரு.ரிச்சர்ட் தாமஸ் பொருளர் |
| 21-02-2016 ஞாயிறு | காலை 8.30 | பாவத்தின் பாரத்த நீக்குதல் | II சாமுவேல் 12:1 - 14 மத்தேயு 2:1 -12 | ஆயர் / லேவீடர் | திரு.A. ஜோசப் லேவீடர் |
| 26-02-2016 வெள்ளி | மாலை 7.00 | லெந்து வெள்ளி III திருமுழுக்கு முனிவர் யோவான் | ஏசாயா 40:20-25 மத்தேயு 3:1-13 | ஆயர் / லேவீடர் | திருமதி. ஸ்விட்லின் ரிச்சர்ட் |
| 28-02-2016 ஞாயிறு | காலை 8.30 | வரையறைகளை கடந்து விசுவாசத்தை ஏற்றுக்கொள்ளுதல் | ஏசாயா 44:28-45 மத்தேயு 15:21-28 | ஆயர் / லேவீடர் | திரு E. மனோகரன் |

## பிப்ரவரி மாதம் - 2016

# ஆயர்மடல்

சிலுவை நாதர் இயேசுவின் திருப்பெயரால் உங்கள் அனைவருக்கும் என் வாழ்த்துதல்களையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

லெந்து காலங்கள் திருச்சபையின் வரலாற்றிலும் சமுதாய சூழலிலும் அவசியமான, சிறப்பான ஒன்று.

இக்காலங்களில் வழிவழியாக கடைபிடித்து வருகின்ற ஜெபம், உபவாசம், சிறப்பு தீர்மானங்கள், இவற்றில் நாம் புதிய சிந்தனைகளைப் பெற்றுக்கொள்ள அழைக்கப்படுகிறோம்.

உண்மையான உபவாசம் எது? என்கிற சிந்தனையை, நமது விசுவாச பார்வைகள் சற்று விரிவாக்க, அதை கடைபிடிக்க அழைக்கப்பட்டிருக்கிறோம். இக்காலங்களில் இறைவனின் பாடுகளும், மரணமும் நமது தனிப்பட்ட வாழ்வில் பாதிப்பை ஏற்படுத்தி இருக்க வேண்டும். அப்படி ஏற்படுத்தியிருந்தால் அது தான் உண்மையான தபசு காலங்கள்.

இறைவனோடும், சகமனிதர்களோடும், சமுதாயத்தோடும் உறவு முறிக்கப்பட்ட மனிதன் மீண்டும் இவைகளோடு உறவினை புதுப்பித்துக் கொள்வதே லெந்து காலத்தின் அத்தியாவசியமாயிருக்கிறது, ஆகவே இந்த தபசு காலங்கள் உங்களுக்கு சிறப்பான வாழ்வோடும், அதிக ஈடுபாடுள்ள சேவையோடும் அர்ப்பணிப்போடும், இருக்கவும் இத்தருணத்தில் திருச்சபயின் ஒழுங்குகளில் பங்குபெற்று ஒத்துழைக்கவும் பணிவன்புடன் உங்களை கேட்டுகொள்கிறேன்.

சிலுவை உறவு உயிர்த்தெழுதலில் முழுமைபெறவும் சாட்சிபகிரவும், கிறிஸ்து உங்களுக்கு உதவிபுரிவாராக. கடவுளுக்கு ஸ்தோத்திரம் உண்டாகட்டும்.

அருட்பணியில் உங்கள் ஆயர்

**Rev.Daniel Chelladurai**

# கிறிஸ்தவ கீதங்களின் வரலாறு

## பாமாலை - 331

## இம்மானுவேலின் இரத்தத்தால் நிறைந்த ஊற்றுண்டாயிருக்கும்

**(There is a Fountain filled with blood)**

“பாவத்தையும் அழுக்கையும் நீக்க.......... திறக்கப்பட்ட ஒரு ஊற்றுண்டாயிருக்கம்”

- சகரியா 13 :1

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தின் அடிமைத்தனத்தினின்று விடுதலை பெறுமுன், பழுதற்ற ஒரு ஆட்டுக்குட்டியை அடித்து. அதின் இரத்தத்தைக் கதவு நிலைகளில் தெளித்ததினால். சங்கார தூதனால் ஏற்பட விருந்த மரணத்திற்குத் தப்பினார்கள். பரிசுத்த நற்கருணையில் நாம் பங்கு பெறும்போது, நமக்காகச் சிந்தப்பட்ட நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலம் நமது சரீரமும் ஆத்துமாவும் நித்திய ஜீவனுக்கென்று காக்கப்படுகின்றன.

இம்மானுவேலின் இரத்தத்தால் என்னும் இப்பாடல், மேற்கூறிய உண்மைகள் அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது.

இப்பாடலை எழுதிய உல்லியம் கூப்பர் (WILLIAM COWPER) 1731 –ஆம் ஆண்டு, நவம்பர் மாதம், 26 – ஆம் தேதி இங்கிலாந்தில் பெர்க்கம்ஸ்டெட் (BERKHAMSTED) கிராமத்தில் பிறந்தவர். அவரது தந்தை, இரண்டாம் ஜியார்ஜ்( GEORGE -II ) மன்னவருக்கு அரண்மனை குருவாக இருந்தார். ஆறு வயதிலேயே கூப்பர் தன் தாயாரை இழந்தார். வெஸ்டுமினிஸ்டர் (WEST MINISTER) பள்ளியில் பயின்று , பின்னர் சட்டப் படிப்புக்கு அனுப்பப்பட்டார். இதில் தேறிய பின், மூன்று ஆண்டுகள் ஒரு பிரபல வழக்கறிஞரிடம் பயிற்சி பெற்று, பிரிட்டிஷ் பாராளுமன்ற பிரபுக்கள் சபையில் ஒரு எழுத்தராக அமர்ந்தார். இவ்வேலை அவருக்கு அச்சத்தை உண்டாக்கியதால், புத்தி ஸ்வாதீனத்தை இழந்து, தூய அல்பான்ஸ் மருத்துவ நிலையத்தில் வைக்கப்பட்டார்.



இங்கு சிகிட்சை பெற்று வரும்போது, 1763 – ஆம் ஆண்டு, எதிர்பாராத நிகழ்ச்சி அவர் வாழ்க்கையில் நேரிட்டது. ஒரு நாள் அங்குள்ள தோட்டத்தில் அவர் உலாவிக்கொண்டிருக்கையில், அங்கு வைக்கப்பட்டிருந்த ஒரு திறந்த வேதபுத்தகத்தைக் கண்டு, அதில் யோவான் சுவிசேஷம் பதினொன்றாம் அதிகாரத்தை வாசிக்கலானார். மரித்துப் போன லாசருவை உயிரோடெழுப்பிய ஆண்டவர், மனச்சோர்வுடன் இருந்த தம்மையும் உயிர்பிக்கக் கூடும் என்னும் நம்பிக்கை அவர் மனதில் உதித்தது. வேதபுத்தகத்தை வாசித்துக் கொண்டிருக்கையில், ரோமர் நிருபத்தில், மூன்றாம் அதிகாரத்தில் நாம் கிறிஸ்துவின் இரத்தத்தினால் மீட்கப்படுகிறோம் என்று எழுதப்பட்டிருப்பதை வாசித்து ஆண்டவரின் பேரில் பூரண விசுவாசமடைந்தார். அவரது ஆத்தும நோயையும் போக்கிய ஆண்டவர், சரீர நோயயையும் குணப்படுத்தினார். அவரது சித்த நோய் குணமானதைக் கண்டு, மருத்துவ நிபுணர்கள் வியப்புற்றனர்.

மருத்துவ நிலையத்திலிருந்து வெளியேறிய பின், அவர் ஆல்னே நகரத்தில். மேரி அம்மையாரின் வீட்டில் வசிக்கலானார். இங்கிருக்கும் போது, ஜான் நியூட்டன் போதகருடன் நட்புக் கொண்டு. இருவரும் சேர்ந்து ஆல்னே பாடல்கள் என்னும் பாட்டுப்புத்தகத்தை உருவாக்கினார். இதில் கூப்பர் அறுபத்தேழு பாடல்கள் எழுதியுள்ளார் இப்பாடல்கள். கிறிஸ்தவ சபையின் பொக்கிஷங்கள் எனப் போற்றப்படுகின்றன. அவர் எழுதிய இதர பாடல்களில் பிரபலமானவை, பாவி, கேள், உன் ஆண்டவர். கர்த்தாவின் அற்புத செய்கை. என்பன இம்மானுவேலின் இரத்தத்தால் என்னும் பாடல் 1770– ல் எழுதப்பட்டது. இரட்சணியச் சேனையார் இப்பாடலுடன் மா மகத்துவ ஊற்றே. எனக்காய்ப் பாய்ந்திடு எனப் பொருள் கொள்ளும். என்னும் பல்லவியையும் சேர்த்துப் பாடுகின்றனர். பிரபல சுவிசேஷப் பிரசங்கியாராகிய மூடி போதகரையும் சுவிசேஷப் பாடகராகிய சாங்கி பாடகரையும் முதல் முதலாக ஒன்றாக இணைத்தது. இந்தப் பாடல்தான்.

கூப்பர் 1800 –ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம், 25 – ஆம் தேதி தமது 69அம் வயதில் காலமானார்.

**- Nishada’s**

## சங்கீதம் – ஒரு அலசல்

## சங்கீதம் – 32

இறைவனால் மனிதன் பரிசுத்தமாக படைக்கப்பட்டான், ஆனால் மனிதனோ பாவத்தில் வீழ்கிறான். வெளிச்சம் இருளாக மாறுகிறது . இது மீறுதலினால் நிகழ்கிறது. இந்த மீறுதலின் பலனைப் பற்றிய உணர்வு மனிதனுக்கு வேண்டும். அதினின்று விடுதலையைத் தரவல்லவர் மெய் தேவனாகிய இயேசு கிறிஸ்து மட்டுமே

மத்தேயு 5 – ம் அதிகாரத்தில் இயேவு கிறிஸ்து பாக்கியவான்கள் எவர்கள் என்பதை அழகாக கோடிட்டுக் காட்டுகிறார் இங்கு சங்கீதக்காரன் இருளை அகற்றி வெளிச்சத்தைக் காண்பவரை பாக்கியவானாக அறிவிக்கிறார். ( வச.1,2.) இதை ஆண்டவர் மாற் 1.5 ல் மனந்திரும்பி என்ற சொல்லை உபயோகித்து விளக்குகிறார். மத் 11:28 ல் இளைப்பாறுதல் என்ற சொல் கூறப்படுகிறது. இதன் மூலம் பாவத்தை விட்டு மனம் திரும்பி இறைவனிடம் வரும் போது இளைப்பாறுதல் தருவார் என்பது விளங்குகிறது.

மற்றும் மனந்திரும்பி பாவத்தை அறிக்கை செய்யாவிட்டால் சஞ்சலப்படுவான என்பது சங்கீதக்காரன் 32: 3, 4 9,10, மூலம் விளக்கப்படுகிறது. தன் பாவங்களை மூடி மறைக்கிறவன் சஞ்சலத்திற்குள்ளாவான் என்பது சங்கீதக்காரன் கருத்து எபி 3:18 ன்படி உங்கள் இருதயங்களை கடினப் படுத்தும் போது வேதனைகள் பெருகும் என்கிறார் தாவீது அரசன் .

ஒருவன் தன் பாவத்தை அறிக்கையிட்டு நீதிமானாக்க பட்டால் தேவகிருபை அவனை சூழ்ந்துக் கொள்ளும் அவனை கர்த்தர் போதித்து நடத்துவார். அப்போது நித்திய மன மகிழ்ச்சி அவனுக்குள் வருகிறது.

எனவே சங்கதீக் காரனின் வார்த்தையின் படி உணர்வடைவோம், அறிக்கையிடுவோம், நித்திய மனமகிழ்ச்சியைப் பெற்றுக் கொள்வோம்.

**Mrs.Stella Gunaseeli**





## தமிழ் கவிஞர்களின் பார்வையில் கிறிஸ்து இயேசு

ஈசன் வந்து சிலுவையில் மாண்டான்
எழுந்துயிர்த்தனன் நாள் ஒரு மூன்றில்
நேச மா மரிய மகத லேனா
நேரில் இந்த செய்தியைக் கண்டாள்
தேசத்தீர்! இதன் உட்பொருள் கேளீர்
தேவர் வந்து நமக்குட் புகுந்தே
நாசமின்றி நமை நித்தம் காப்பார்
நம் சுகந்தையை நாம் கொன்று விட்டால்.

அன்பு கான் மரியாள் மகதலேனா,
ஆவி காணுதிர் யேசு கிறிஸ்து
முன்பு தீமை வடிவினைக் கொன்றால்
மூன்று நாளினில் நல்லுயிர் தோன்றும்
பொன் பொலிந்த முகத்தின்றி கண்டே,
போற்றுவாள் அந்த நல்லூயிர் தன்னை
அன்பெனும் மரியா மகதலேனா
ஆஹா! சாலப் பெருங்களி யிஃதே

உண்மை யென்ற சிலுவையிற் கட்டி
உணர்வை ஆணித்
தவங் கொண்டடித்தால
வண்மைப் போருயிர் – யேசு கிறிஸ்து
வான மேனியில் அங்கு விளங்கும்
பெண்மை காண் மரியாள் மகதலேனா
பேணும் நல்லறம் இயேசு கிறிஸ்து
நுண்மை கொண்ட பொருளிது கண்டீர்
நொடியி லிஃகு பயின்றிடலாகும்.

**மகா கவி சி.சுப்புரமணிய பாரதியார் பாடிய சுதேச கீதங்கள் ( 2 - ம் பாகம் 153ம் பக்கம்)**

திரு. அலக்ஸ் ஹென்றி

தொடரும்.....

# வேத வினா - விடை போட்டி

## பிப்ரவரி மாத கேள்விகள்

## II கொரிந்தியர் ( வசன ஆதாரம் தரவும் )

1. கொரிந்தியருக்கு இந்த இரண்டாம் நிருபத்தை எழுதியது யார்?
2. பூர்த்தி செய்க: அநேகரைப்போல ...................., ...................., ......................, பேசாமல்
3. தேவனுடைய வாக்குதத்தங்கள் எல்லாம் கிறிஸ்துவுக்குள் என்ன விசேஷத்தன்மையுடையவைகளாக இருக்கின்றன?
4. பவுல் எத்தனை முறை கொரிந்தியருக்கு சென்றார்?
5. பவுல் இந்த நிருபத்தை எழுதுகிறபோது என்ன மனநிலையிலிருந்தார் அல்லது எப்படி எழுதினார்?
6. மரண வாசனை யாருக்கு? ஜீவ வாசனை யாருக்கு?
7. எப்பொழுது முக்காடு எடுப்பட்டுபோகும்?
8. பவுலின் ஆவி ஏன் அமைதலில்லாமலிருந்தது?
9. யாருக்கு சுவிசேஷம் மறைபொருளாயிருக்கிறது?
10. 5: 100 = 100 : 10,000 (பழைய ஏற்பாடு)

**விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 20-02-2016**

<u>விடைகள் அனுப்ப வேண்டிய முகவரி</u>

**C.S.I. இயேசுவில் புதுவாழ்வு ஆலயம்**
எண் 55, 3வது மனை பிரிவு,
ஆசிரியர் குடியிருப்பு,
லட்சுமிபுரம், சென்னை - 600 099.

குறிப்பு: தெளிவான முகவரியுடன்
சந்தா எண்ணையும் சேர்த்து எழுதி அனுப்பவும்

csinewlifeinjesus@gmail.com 9444 633129

**www.csinewlifeinjesus.org**

## வாழ்த்துகிறோம்!

நமது சபையை சார்ந்த திரு.பால் பன்னீர் செல்வம் - மஞ்சுளா அவர்களின் மகன் திரு. **ஜோனத்தான் ஜோசப் ராஜேஷ்** - செல்வி நான்சிக்கு திருமணம் 01.02.2016 அன்று நடைபெற்றது.
திருச்சபையராக அவர்களை வாழ்த்துகிறோம்.



# <u>சென்ற மாத போட்டியின் விடைகள்</u>

1. I கொரி 1: 14 - 17
2. I கொரி 1 : 27
3. I கொரி 1 : 23
4. I கொரி 1 : 23
5. I கொரி 2 : 16
6. I கொரி 3 : 8
7. I கொரி 4 : 15 - 16 (தகப்பன்)
8. I கொரி 4 : 8, 3 : 9
9. I கொரி 4 : 17
10. ஆகாய் 2 : 16

## 9 கேள்விகளுக்கும் மட்டும் சரியான விடை எழுதியவர்கள்

1. திருமதி. எஸ்தர் சந்தோஷ்ராஜ்
2. திருமதி. கீதா ஹென்றி
3. திருமதி. ஜாய்ஸ் விமலா
4. திருமதி. கலா சுந்தரகுமார்
5. திருமதி. ஸ்டெல்லா ராஜ்
6. திருமதி. ஸ்வீட்டிலின் ரிச்சர்ட்
7. திருமதி. மேரி சிறிய புஷ்பம்
8. திருமதி. தேவ ரோஸ்லின்
9. திருமதி. லீலா டிக்சன்

## படித்ததில் பிடித்தது

**சாவியை பார்த்து சுத்தியல் கேட்டது:**

உன்னை விட நான் வலிமையானவனாக இருக்கின்றேன், ஆனால் ஒரு பூட்டைத் திறக்க நான் மிகவும் சிரமப்படுகிறேன் ஆனால் நீ சீக்கிரம் திறந்து விடுகிறாயே அதெப்படி?

**அதற்கு சாவி சொன்னது:**

நீ என்னை விட பலசாலிதான் அதில் சந்தேகம் இல்லை பூட்டை திறக்க நீ அதன் தலையில் அடிக்கிறாய், நான் பூட்டின் இதயத்தை தொடுகிறேன் என்றது.

**- A.Joseph**

# Birthdays in The Month of February

| | | | |
|---|---|---|---|
| February 3 | Dr. Evangeline Therasa albert | February 17 | Mrs. Marcy Grace Angeline |
| February 5 | Mr.B.Manoj samuel Aaron | | Mr. E. Arul Raj |
| February 6 | Miss. Hannah Margaret | February 18 | R. Kalaiyarasi |
| | Mrs. D.Jubilee jane | February 20 | Mr. D. Selvaraj |
| February 7 | Mrs.J.Enid Job | February 21 | Mr.N. Nova Manuel Raj |
| February 9 | Miss. Bency Amithah | | Anne Mary Nirmala |
| February 10 | Mr.S.Barath | February 22 | Mr. Dinesh John Dawson |
| | Mr.G.Rajan | | Mrs. Jasmine J. Nainita |
| February 11 | Mrs.Stella Raju | February 24 | Master. Philbert Manuel Raj |
| February 12 | Mrs. VijayaManohar | | Mrs. Kala Sundarakumar |
| | Mr. P. Selva Durai | | Mrs. M. Shamala |
| | Mrs. J.Merril Jemimah | February 25 | Mrs. Felishia David |
| February 13 | Mrs. Shantha Douglas | | Mrs. R. Catherine Hilda |
| February 15 | Mrs. Cristy Beulah | | Miss. T. R. Evangeline Retna Grace |
| | Mr.R. Vinu Raja | | Mrs. Charlet Selvaraj |
| | Mrs. J.Glory Vitta Bai | | Master. Melstin Jeno |
| February 17 | Mrs. Jeba Rani | | Mr.D.Steve Rohan |
| | Mr. J. Paul Robinson Kennady | | J.Daniel Abraham |
| | Mr. N. Selvamani | | Mr.Sudesh |
| | | | Mrs. Sweetly Angelin Flowerence |

# Wedding Days In February

| | |
|---|---|
| Febraauary 01 | Mr.R.Sudhesh Babu & Mrs. S.Sweetly Angelin Flowrence |
| Febraauary 06 | Mr. J.Radha Krishnan & Mrs. R. Shantha Kumari |
| Febraauary 06 | Mr. G. Vigil Singh & Mrs. Beaultin Vigil |
| Febraauary 09 | Mr. P. Jeyaraj & Mrs. P.Kumari |
| Febraauary 09 | Mr. S.Alexander & Mrs. Priscilla Hepsibah |
| Febraauary 10 | Mr.M.Ravi & Mrs. P.Evalmona Metilda |
| Febraauary 12 | Mr. P. Parthiban Prasad & Mrs. Y.Sukhi |
| Febraauary 13 | Mr.A. Joseph & Mrs. Usha Joseph |
| Febraauary 15 | Mr. A. Gnanaraj & Mrs. V. Mary Syria Pushpam |
| | Mr.A.M. Ravi & Mrs. R. Santhosam |
| Febraauary 16 | Mr. G.S. Titus Prabakaran & Mrs. P. Annie Patricia |
| | Mr. Sagadevan & Mrs. Rajam Sagadevan |
| Febraauary 19 | Mr.P. Amutharaj & Mrs. A. Kavitha Precella |



**பிறந்த நாள் மற்றும் திருமண நாள் கொண்டாடும்**
**அனைவருக்கும் திருச்சபையின் சார்பில்**
**வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்!**



# Important Days in February



| | |
|---|---|
| February 1 | Indian Coast Guard |
| February 2 | World Wetlands Day |
| February 4 | World Cancer Day |
| February 5 | Kashmir Solidarity Day |
| February 6 | International Day of Zero Tolerance to Female Genital Mutilation |
| February 7 | International Development Week |
| February 8 | Chinese New Year |
| February 10 | Ash Wednesday |
| | National Deworming Day |
| February 11 | World Day of the Sick |
| February 12 | Darwin Day, Abraham Lincoln's Birthday |
| February 13 | World Radio Day |
| February 13 | Sarojini Naidu's Birth Day |
| February 14 | Saint Valentine's Day |
| February 20 | World Day of Socail Justice |
| February 21 | International Mother language Day |
| February 24 | World Sustaibale Energy Day, Central Excise Day |
| February 26 | Garden Tourism Festival |
| February 28 | National Science Day / Week |
























Febrauary 12





Sarojini Naidu Birthday


















# அழிவையும் ஆற்றலாக்கிய அன்பு

மனிதநேயம் என்னும் மாண்பியத்தையும்
மக்கள் கண்டனர் இம் மழையில்

ஒருமைப்பாடு என்னும் உணர்வையும்
மனதில் ஊரவைத்தது இம் மழை

சிங்காரச் சென்னை சிதலமடைந்தாலும்
மனங்கள் சிதலமடையவில்லை இம்மழையில்

சிக்கிக் கொள்வோமோ என்றுகூட நினைக்காமல்
சிங்கமாய் சென்று சீர் செய்தனர் இளைஞர்கள்

அன்பு என்னும் ஆற்றலை அடை மழையிலும்
அணையாமல் ஆணித்தரமாய் உணர்த்தினர் மக்கள்

சாதி, மத வேறுபாடுகள் களைந்து காற்றாறு போல
கால் வலியையும் பொருட்படுத்தாமல் சுழன்றனர் மூப்படையும்

அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ் என்பதற்கிணங்க
ஆறுகளையும் அடைத்து விட்டது – இவ்வன்பு

இயற்கை என்னும் இடரையும் இடிதாங்கிபோல
தாங்கி கொண்டது இம் மனித நேயம்

வீட்டை இழந்தாலும், உடமைகளை இழந்தாலும் – நம்
உடன் பிறப்புகளைப் போன்ற அன்புள்ளங்களை மறக்க முடியவில்லை

உயிர்களை உலகைவிட்டு சென்றதற்கு வருந்தும்
இம்மழை இதற்கு நான்மட்டும் காரணம் அல்ல என்கிறது

உயிர்களை பரிக்கொடுத்த இம் மண்ணில் மீண்டும்
சில உயிர்கள் உயிர்பெற்றன இம் மழையில்

மழையே! நீ வந்ததற்காக வருந்தவில்லை நாங்கள்,
நீ வரவேண்டிய நேரத்தில் தான் வந்திருக்கிறாய்

ஆனால் சற்று அதிகமாக வந்துவிட்டாய்
அதற்காகத்தான் நாங்கள் வருந்துகிறோம்



பாடிய பயிர்களை வளம் கொழிக்க செய்வாய்
என்று நினைத்தோம் – ஆனால்

வளர்ந்த பயிர்களையும் வாரிக்கொண்டு போய்விட்டாய்
வருந்துகிறது உழவர்களின் நெஞ்சம்

கொட்டும் மழையிலும் கொட்டாவி விட்டு உறங்க
கோழைகள் அல்ல நாங்கள் என்று கொதித்தெழுந்தனர் இளைஞர்கள்

கசடுகளையும் கண்டுக்கொள்ளமல் கால்களை
மழைநீரில் பதித்தனர் பக்குவமாய் இவர்கள்

மழையே நின்றுவிடு என்று சொல்ல கடவுள்
எங்களுக்கு சக்தியை கொடுக்கவில்லை

ஆனால் அன்பு என்னும் மனித நேயத்தை
தந்துள்ளார் நம் இறைவன்

இயற்கையும் இடர் கொண்டு விட்டனவோ
மனித நேயத்தின் மாட்சியைக் கண்டு

எண்ணி பார்க்காத நேரத்தில் கொடிய இம்மழையில்
புதிய எண்ணங்கள் துளிர் விட்டனவோ!

மறைத்து வைக்காமல் மனிதன் வாரிவழங்கிய
பொருட்கள் கூட, பொருள் இழந்த மனிதருக்கு பொன்னாய் விளங்கின

மழை, வந்ததாலோ என்னவோ தெரியவில்லை அன்பு
மனங்களையும் மழை அடித்து வந்து மற்றவர்களுக்கு காட்டியது.

மாறாத அன்பு உள்ளங்கள் இருக்கும் வரை மழை
மட்டும் அல்ல எப்பேர்பட்ட பேரிடரையும்

நாம் சந்திக்கலாம் இறைவன் அருளோடு
மழைக்கு நன்றி மனித நேயத்தை ஊட்டியதற்கு.

ஆக்கம்
**பா. ஏவாள் மோனா மெட்டில்டா**